பருவப்பத்திரம் இல. XVIII — *1967*

# 1965 ஆம் ஆண்டு
# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலைய
# வருடாந்த அறிக்கை

பகுதி II

**ஓகத்து, 1967**

*இலங்கை அரசாங்க அச்சகத்தினரால் பிரசுரிக்கப்பட்டது*

*கொழும்பு, காலிமுக செயலாளர் அலுவலகம், தபாற் பெட்டி இல. 500,*
*அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : சதம் 90** **தபாற் செலவு : சதம் 20**

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

1965 ம் ஆண்டு வருடாந்த அறிக்கை

# பாகம் II

பதிப்பாசிரியர்கள்

இ.எம். செனறி, பீ.எஸ்சி, பீஎச்.டி (லண்), ஏ.ஆர்.சி.எஸ், டி.ஐ.சி
அதிபர், இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிலையம்

ஆர். எல். டி சில்வா, பீ.எஸ்சி (இலங்), பீஎச்.டி (லண்), டி.ஐ.சி.
ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தாவர நோயியல்)
இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிலையம்

மொழிபெயர்ப்பு : சி. கிருஷ்ணபிள்ளை, பீ.எஸ்சி (இலங்)

வெளியீடு
இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிலையம்
சென்ற் கூம்ஸ், தலவாக்கொல்லை, இலங்கை
1966

# பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்கம் |
| கட்டுப்பாட்டுச் சபை .. .. .. .. | 5 |
| உத்தியோகத்தர் .. .. .. .. | 7 |
| அதிபரின் அறிக்கை .. .. .. .. | 13 |

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

1965 டிசெம்பர் 31ந் திகதியன்றுள்ள கட்டுப்பாட்டுச்சபை

தலைவர்

திரு எப். அமரசூரியா

பதவிவழி அங்கத்தவர்கள்

கமத்தொழில் அதிபர் :

திரு டி. சி எல். அமரசிங்க, சி.ஏ.எஸ்

கௌரவ நிதி அமைச்சரின் பிரதிநிதி :

திரு ஜி. டி. லோஸ், சி.ஏ.எஸ்

தலைவர், இலங்கை தோட்டத் துரைமார்கள் சங்கம் :

திரு டபிள்யு. ஜே. சில்டஸ்டன்

தலைவர், இலங்கை தோட்டத் துரைமார்கள் சங்கத்தின் முகவர்த் தாபனம் :

திரு ஜே. எல். கப்பர்

தலைவர், இலங்கை கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கம் :

திரு டி. பி. எல்பொல, சி.பி.இ

தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரி :

திரு சி. பி. சண்முகம், சி.ஏ.ஸ்.

அதிபர், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் :

கலாநிதி இ. எம். செனறி

நியமன அங்கத்தவர்கள்

இலங்கை தோட்டத் துரைமார்கள் சங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் :

திரு எஸ். பி. வைத்திலிங்கம்
திரு ஜி. பி. மிடில்டன்
திரு ஏ. பி. பிங்கர்

இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்தாபனத்தால் நியமிக்கப்பட்டவர்கள் :

திரு எச். ஏ. உவிற்ருல்
திரு டி. ஏ. நீல்
திரு பி. ஜே. சி. டறன்ற்

கீழ்ப்பிரதேச உற்பத்தியாளர் சங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் :

திரு எப். அமரசூரியா
திரு எஸ். பத்மநாதன்
திரு ஜே. எல். டி. பீரிஸ்

சிறுதோட்டச் சொந்தக்காரரின் பிரதிநிதிகள் :

திரு டி. இ. ஹெற்றியாராச்சி, ஜே.பி, யு.எம்.
திரு எம். இராஜேந்திரம், எம்.பி.இ, ஜே.பி.

பிரதிநிதிகள் சபைப் பிரதிநிதி :

திரு டி. ஜே. றனவீரா, எம்.பி.

செயலாளர்

திரு ஏ. சி. பெரரா

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

<u>*1965 டிசெம்பர் 31ந் திகதியன்றுள்ள உத்தியோகத்தர்*</u>

| | |
|---|---|
| அதிபர் | இ. எம். செனறி, பீ.எஸ்சி, பீஎச்.டி (லண்), ஏ.ஆர்.சி.எஸ், டி.ஐ.சி. |
| பிரதி அதிபர் | ஜே. ஏ. எச். ரொலஸ்ற், பீ.எஸ்சி, (றீடிங்) |
| உதவி அதிபர் | எல். எச். பெர்ஞண்டோ, பீ.எஸ்சி, பீஎச்.டி, (லண்) |
| **கமத்தொழில் இரசாயன வியல்** | |
| கமத்தொழில் இரசாயனவறிஞன் | ஜே. ஏ. எச். ரொலஸ்ற், பீ.எஸ்சி, (றீடிங்) |
| ஆராய்ச்சி உதவியாளர்கள் | டபிள்யு. எம். டபிள்யு. பி. மணிப்புரு, பீ.எஸ்சி, (இலங்) |
| | எஸ். சிவசுப்பிரமணியம், பீ.எஸ்சி, (இலங்) |
| | எஸ். சந்தானம், பீ.எஸ்சி, (இலங்) |
| நுண்தொழில் உதவியாளர்கள் | வி. மெண்டிஸ் |
| | ரி. சி. சற். ஜேமன் |
| | திருமதி பி. ஐ. டி சில்வா, பீ.எஸ்சி (இலங்) |
| | எஸ். சுந்தரலிங்கம், பீ.எஸ்சி (பூனு) |
| | எம். சிக்குராஜபதி, பீ.எஸ்சி, (இலங்) |
| | ரி. குலரட்ண, பி.எஸ்சி, (இலங்) |
| | கே. சிவலிங்கம், பீ.எஸ்சி, (இலங்) |
| | ஏ. சோமரட்ண, பீ.எஸ்சி, (இலங்) |
| **தாவர இனப்பெருக்கவியல்** | |
| ஆலோசகர் | ஏ. வி. இரிச்சேட், பீ.எஸ்சி (லண்), எம்.எஸ்சி, (கலிபோ), கமத் டிப் (கன்டாப்) ஏ.ஐ.சி.ரி.ஏ (திருனிடாட்) |
| ஆராய்ச்சி உதவியாளர் | |
| தாவர இனப்பெருக்கவியல் | வி. எஸ். குலசேகரம், பீ.எஸ்சி, (இலங்) |
| தாவர விருத்தி | ஏ. ஆர். செபஸ்டியாம்பிள்ளை, பீ.எஸ்சி, (இலங்) |
| நுண்தொழில் உதவியாளர்கள் | |
| சென்ற் கூம்ஸ் | எச். ஆர். சொலமன் |
| | டி. ஜானகிரும், பீ.எஸ்சி (மதராஸ்) |
| | ஏ. எஸ். பி. கோமஸ், பீ.எஸ்சி, (இலங்) |
| சென்ற் ஜோக்கிம் | டி. டி. குருன் |
| ஹந்தானை | எச். பி. இரத்நாயக்கா |

| | |
|---|---|
| பச்ஸ்ற | ஏ. எம். அபயசிங்க |
| கொட்டாவ | கே. எச். ஜி. குணபாலா |

## கீழ்ப்பிரதேச சேவை

| | |
|---|---|
| உதவி அதிபர் | எல். எச். பெர்ணுண்டோ, பீ.எஸ்சி, பீஎச்.டி (லண்) |
| மாவட்ட ஆலோசனை உத்தியோகத்தர் | ஜே. வி. சபாநாயகம், பீ.எஸ்.ஏ. (தொறன்தோ) |

நுண்தொழில் உதவியாளர்கள்

| | |
|---|---|
| சென்ற் ஜோக்கிம் | ஜே. ஐ. எச். பண்டாரநாயக்கா<br>எச். டி. ஜயசிங்கா<br>எச். எச். சமரக்கோன்<br>என். யோகரத்தினம், பீ.எஸ்சி (அலகபாட்)<br>யு. பி. டி. எஸ். வைத்தியநாதா, பீ.எஸ்சி (இலங்)<br>டி. டி. குரூன்<br>என். எஸ். இராஜேந்திரம், பீ.எஸ்சி (மதராஸ்) |
| கொட்டாவ | கே. எச். ஜி. குணபாலா |
| பிரதான எழுதுவினைஞர் | ஆர். ஐ. பெரேரா |
| சுருக்குத் தட்டெழுத்தாளர் | எஸ். கே. பி. தம்பிமுத்து |
| எழுதுவினைஞர் | கே. பி. குணவாதன |
| மின்சாரத் தொழிலாளர் | பி. ரி. றனசிங்க |

## தாவர உடற்ருெழிலியல்

| | |
|---|---|
| தாவர உடற்ருெழிலறிஞன் | யு. பெத்தியாகொட, பீ.எஸ்சி (இலங்) பீஎச்.டி (லண்), டி.ஐ.சி |
| ஆராய்ச்சி உதவியாளர்கள் | எஸ். கந்தையா, பீ.எஸ்சி (இலங்)<br>எஸ். நாகராசா, பீ.எஸ்சி (இலங்) எம்.எஸ் (கலிபோ) |
| நுண்தொழில் உதவியாளர்கள் | |
| சென்ற் கூம்ஸ் | எம். பியசேன<br>ஜி. எம். எச். பி. விஜயதுங்கா<br>எஸ். கிருஷ்ணபிள்ளை, பீ.எஸ்சி (இலங்) |
| சென்ற் ஜோக்கிம் | என். எஸ். இராஜேந்திரம், பீ.எஸ்சி (மதராஸ்) |

## நெமற்ருேடியல்

| | |
|---|---|
| ஆலோசகர் | ஏ. கேர், பீ.எஸ்சி (எடின்), பீஎச்.டி (அடிலே) |
| பதில் நெமற்ருேட றிஞன் | என். சண்முகநாதன், பீ.எஸ்சி (இலங்), பீஎச்.டி (லண்) |

| | |
|---|---|
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | பி. சிவபாலன், பீ.எஸ்சி (இலங்), பீஎச்.டி (றற்கர்ஸ்) |
| நுண்தொழில் உதவியாளர்கள் | எம். கே. வைத்திலிங்கம்<br>பி. ஏ. ஜோன்<br>எஸ். சமறஜீவா<br>ஏ. ஆர். எம். ஹசிம்<br>ரி. மணிவாசகர் |

## தாவர நோயியல்

| | |
|---|---|
| ஆலோசகர் | ஏ. கேர், பீ.எஸ்சி (எடின்), பீஎச்.டி (அடிலே) |
| தாவர நோயியலறிஞன் | என். சண்முகநாதன், பீ.எஸ்சி (இலங்), பீஎச்.டி (லண்) |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | ஆர். எல். டிசில்வா, பீ.எஸ்சி (இலங்) பீஎச்.டி (லண்), டி.ஐ.சி |
| நுண்தொழில் உதவியாளர்கள் | டபிள்யு. டபிள்யு. றெட்லிக், பீ.எஸ்சி (இலங்)<br>பி. வி. அருள்பிரகாசம், பீ.எஸ்சி (மதராஸ்)<br>எஸ். முருகையா<br>டபிள்யு. ஆர். எப். ரொட்றிகோ, பீ.எஸ்சி (இலங்)<br>எஸ். ஆர். ஏ. பெர்ணாண்டோ, பீ.எஸ்சி (இலங்) |

## சிற்றுயிரியல்

| | |
|---|---|
| சிற்றுயிரறிஞன் | ஜே. இ. கிரனம், பீ.ஏ (கன்டாப்), டி.ஐ.சி |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் | |
| ஹந்தானை | டி. கல்நைடோ, பீ.எஸ்சி (இலங்), பீஎச்.டி (லண்) |
| சென்ற் கூம்ஸ் | டபிள்யு. தந்தநாராயன, பீ.எஸ்சி (இலங்) பீஎச்.டி (லண்), டி.ஐ.சி |
| ஆராய்ச்சி உதவியாளர் | டி. ஜே. டபிள்யு. றனவீர |
| நுண்தொழில் உதவியாளர்கள் | |
| சென்ற் கூம்ஸ் | இ. எப். டபிள்யு. பெர்ணாண்டோ, பீ.எஸ்சி (இலங்)<br>சி. சண்முகம்<br>ஏ. கதிரவேற்பிள்ளை, பீ.எஸ்சி (இலங்) |
| ஹந்தானை | கே. திருஞானசுந்தரம், பீ.எஸ்சி (இலங்) |

## உயிரினவிரசாயனம்

| | |
|---|---|
| உயிரினவிரசாயனவறிஞன் | ஜி. டபிள்யு. சன்டசன். பீ.எஸ்சி (கலிபோ), பீ.எச்டி (நொட்) |
| உயிரினவிரசாயனவறிஞன் (தயாரிப்பு) | ஆர். எல். விக்கிரமசிங்கா, பீ.எஸ்சி (இலங்) பீ.எஸ்சி (லண்), பீஎச்.டி (செவ்), எப்.ஆர்.ஐ.சி. |

| | |
|---|---|
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தயாரிப்பு) | ஏ. எஸ். எல். திரிமான பீ.எஸ்சி, பீஎச்.டி (லண்) |
| ஆராய்ச்சி உதவியாளர்கள் | ஆர். ஆர். செல்வேந்திரன், பீ.எஸ்சி (இலங்) |
| | ஜி. ஆர். ரேுபட்ஸ், பீ.எஸ்சி (இலங்) |
| நுண்தொழில் உதவியாளர்கள் | பி. பி. எம். பெரரா |
| | கே. சிவபாலன், பீ.எஸ்சி (இலங்) |
| | வி. பெர்ஞண்டோ |
| | கே. பி. டபிள்யு. சி. பெரரா, பீ.எஸ்சி (இலங்) |
| | வி. எச். பெரரா, பீ.எஸ்சி (இலங்) |

## தொழின்முறையியல்

| | |
|---|---|
| தொழின் முறையியலறிஞன் | டி. கீர்த்திசிங்கா, பீ.எஸ்சி (இலங்), பீஎச்.டி (லண்) டி.ஐ.சி |
| தேயிலை சுவைதிறனறிவோன் | சி. எச். விக்கிரமசிங்கா |
| ஆராய்ச்சி உதவியாளர் | டபிள்யு. ஜோசப், பீ.எஸ்சி (இலங்) |
| நுண்தொழில் உதவியாளர்கள் | |
| சென்ற் கூம்ஸ் | டபிள்யு. சி. ஏ. டி சில்வா, பீ.எஸ்சி (இலங்) |
| | சி. கந்தப்பா, பீ.எஸ்சி (இலங்) |
| | எஸ். சமரசிங்கம் |
| | எம். ரி. சுப்பிரமணியம், பீ.எஸ்சி (இலங்) |
| | ரி. ஏ. முனசிங்க |
| சென்ற் ஜோக்கிம் | ரி. எப். சால்டின், பீ.எஸ்சி (இலங்) |

## புள்ளிவிவரவியல்

| | |
|---|---|
| புள்ளிவிவரவியலறிஞன் | பி. கணபதிப்பிள்ளை, பீ.எஸ்சி (லண்), எப்.எஸ்.எஸ் |
| உதவியாளர் | கே. சீவரத்தினம் |

## ஆலோசனைச் சேவை

| | |
|---|---|
| பிரதான ஆலோசனை உத்தியோகத்தர் | சி. பி. பொஸ்டர்—பாஹம், எம்.ஏ (கன்டாப்) |
| ஆராய்ச்சி உதவியாளர்கள் | டி. ரி. வெத்தசிங்கா, பீ.எஸ்சி (இலங்) |
| | ஆர். கே. நத்தானியல், பீ.எஸ்சி (பூனு) |
| மாவட்ட ஆலோசனை உத்தியோகத்தர்கள் | |
| ஊவா | எல். எம். டி. டபிள்யு. திலகரத்ன, பீ.எஸ்சி (இலங்), எம்.இடி (கலிபோனியா) |
| கீழ்ப்பிரதேசம் | ஜே. வி. சபாநாயகம், பீ.எஸ்.ஏ (தொறன்தொ) |
| நுண்தொழில் உதவியாளர் (ஊவா) | டி. என். ஆர். விஜயவர்தன |
| நிழற்படம் பிடிப்போர் | டி. ஜே. எம். ஹெற்றியாராச்சி |
| பதிவு எழுதுவினைஞர் | கே. எல். டி. அல்விஸ் |

## சென்ற் கூம்ஸ் தோட்டம்

| | |
|---|---|
| கமத்தொழிலறிஞன் | எல். ஏ. சீவரத்தினம், பீ.எஸ்சி (டன்ல்ம்) |
| கந்தோர்ப் பதவியினர் | |
| தலைமை எழுதுவினைஞர் | பி. இ. டி சில்வா |
| சிரேட்ட உதவியாளர் | எச். சி. விக்கிரமசிங்கா |
| கனிட்ட உதவியாளர் | எம். ஆர். கே. கப்பிரியல் |
| தலைமை தொழிற் சாலை உத்தியோகத்தர் | வீ. ஏ. பெர்னண்டஸ் |
| அப்போதிக்கரி | எஸ். பி. டி சில்வா |

## சென்ற் ஜோக்கிம் தோட்டம்

| | |
|---|---|
| தோட்டத்துரை | ஜி. எஸ். முத்தெத்துவெகம |
| கந்தோர்ப் பதவியினர் | |
| தலைமை எழுதுவினைஞர் | ஜி. எல். ஏ. தொமஸ் |
| சிரேட்ட உதவியாளர் | ஏ. ஜி. றபற் |
| கனிட்ட உதவியாளர் | ஏ. பத்திறேஜ் |
| தலைமை தொழிற் சாலை உத்தியோகத்தர் | எம். எஸ். டபிள்யு. விஜயறற்ண |

## எந்திரவியல்

| | |
|---|---|
| பாக்ரர் | ஒ. ஜே. பெர்னண்டோ |
| மின்சார முகாரி | டபிள்யு. ஆர். சொலமன் |
| வேலைத்தல எழுதுவினைஞர் | ஆர். ஏ. டானியல் |
| பண்டசாலைப் பொறுப்பாளர் | ஐ. பி. திசநாயக்க |
| இயந்திரத் தொழிலாளர்கள் | டி. ஏ. எஸ். ஒபாதா |
| | கே. எஸ். வடிவேலு |
| மின்சாரத் தொழிலாளர் | டபிள்யு. ஏ. சி. டி சில்வா |

## பரிபாலனம்

| | |
|---|---|
| பிரதான பரிபாலன உத்தியோகத்தர் | ஏ. சி. பெரரா |
| உதவி பரிபாலன உத்தியோகத்தர் | எஸ். தியாகராசா |
| அதிபரின் பதில் அணுக்க உதவியாளர் | ஜி. ஏ. எஸ். குணசிங்கா |
| கணக்கு உதவியாளர் | ஏ. எச். பி. டயஸ் |
| உதவிச் செயலாளர் | சி. கீர்த்திரத்ன, எப்.சி.சி.எஸ் |
| சுருக்குத் தட்டெழுத்தாளர்கள் | எப். ஜி. டி சில்வி |
| | பி. டபிள்யு. உடுவாவல |
| | எஸ். ஏ. எல். எச். பெர்னண்டோ |
| | எஸ். டி. ஜே. ஜே. விதானபத்திரன |
| கணக்கு எழுதுவினைஞர்கள் | டபிள்யு. ஜே. சாமுவல் |
| | எம். பி. பாலிஸ் |
| | ரி. ஆர். பி. சலி |
| | கே. டி. பி. எச். அபயகுணவர்தன |
| | ஜி. ஏ. கே. பி. டி சில்வா |

| | |
|---|---|
| | எஸ். குலசபார்நாதன் |
| | எச். அத்தநாயக்க |
| | என். சச்சிதானந்தன் |
| | என். எம் ஜெயத்திலகா |
| தட்டச்சாளர்கள் | வி. கோதாகொட |
| | ஜே. என். அப்பசிங்கா |
| | டி. டபிள்யு. பதலோமியஸ் |
| | எஸ். பி. வெத்தாவ |
| நூல்நிலையப் பொறுப்பாளர் | டி. ஜே. எஸ். டி. சில்வா, பீ.எஸ்சி (பஞ்ஜாப்) |
| மொழி பெயர்ப்பாளர்/ போதனுசிரியர் | சி. எம். பெர்ஞண்டோ, பீ.ஏ. (இலங்) |

அதிதி முகவர்கள்

| | |
|---|---|
| சென்ற் கூம்ஸ் | பி. ஆர். யு. ஈஸ்டீல் |
| சென்ற் ஜோக்கிம் | ஜே. டபிள்யு. கிரேய்க் |

# அதிபர் அறிக்கை

இ. எம். சென்றி, பீ.எஸ்சி, பீஎச்.டி, ஏ.ஆர்.சி.எஸ், டி.ஐ.சி

## பொது

கலாநிதி ஆர். வி. நொறிஸ் அவர்கள் தலைமையிலிருந்த ஆராய்ச்சி குழுவினர் விலகியதிலிருந்து சிரேட்ட பதவியினரை தேர்ந்தெடுப்பது மிகக் கஷ்டமாக இருந்தது. இதனால் ஆராய்ச்சி வேலைகள் தடைப் பட்டன. இதன்காரணமாக, ஒரே ஆராய்ச்சிவேலை அல்லது இதன் ஒரு பகுதி இரண்டு அல்லது இரண்டிற்கூடிய பிரிவுகளால் நடாத்தப்பட்டது. இதனால் சில இசைவற்ற முடிவுகள் ஏற்பட்டன. பயிராக்கவியற் பிரிவை கமத்தொழிற் இரசாயன வியற்பிரிவுடன் சேர்த்ததால், முக்கியமாகச் செயற்கை உரங்கள் பற்றிய ஆராய்ச்சி வேலைகள் உட்பட பல ஆராய்ச் சிகளை சுலபமான முறைகளில் செய்ய முடிந்தது.

சபையின் கொள்கைப்படி இலங்கைப் பதவியினர் மேற்படிப்புக்காக பிறநாடுகளுக்கு அனுப்பப்பட்டுவந்ததால் இப்போது இது அதிக நன்மை யளிக்கின்றது. இதன் விளைவால், கடந்த ஓரிரு வருடங்களாக இந் நிலையத்திலிருக்கும் பல சிரேட்ட பதவியினர் மேம்பட்ட பரிசோதனைகளில் ஈடுபட்டுள்ளார்கள். எனினும் மத்திய பதவியினரும் கனிட்ட பதவியின ரும் இப்போதும் விலகிக்கொண்டே இருப்பதாலும் இதைத் தொடர்ந்து இவ்வெற்றிடங்கள் நிரப்பமுடியாமலிருப்பதாலும் நமது ஆராய்ச்சி வேலைகள் ஓரளவு பாதிக்கப்படுகின்றன. அதிக தகுதியுள்ள விஞ்ஞானி களையும் இஞ்சினியர்களையும் தேர்ந்தெடுப்பது அதிக கஷ்டமாக இருக்கிறது. முக்கியமாக இஞ்சினியர்க்கலைப் பட்டதாரிகளை எடுப்பது கஷ்டமாக இருப்பதால் தொழினுட்பவறிஞனின் ஆராய்ச்சிகள் அதிகம் தடைப்படுகின்றன. இந்நிலை சீர்திருந்தலாமென எதிர்பார்த்து, புதுமுறைத் தொழிற்சாலை ஆராய்ச்சி வேலைகளைச் செய்வதற்கு சென்ற் கூம்ஸிலும் சென்ற் ஜோக்கிமிலும் பரிசோதனைச் சாலை, வேலைத்தலம் தொழிற்சாலை இடவசதிகள் அமைக்கப்பட்டுவருகின்றன. பல தொழிற்சாலைகள் அதிகளவு தேயிலை உற்பத்தி செய்வதில் முனைந்திருப்பதால் இத்தகைய ஆராய்ச்சி களுக்குஅதிக கிராக்கியுண்டு. இதுவரை அறியப்படாத, ஒரு ஏக்கருக்கு 6000 தொடக்கம் 8000 இருத்தல் செய்தேயிலை உற்பத்திசெய்வதற்கு இவ் வாராய்ச்சிகள் எவ்வளவு அத்தியாவசியமானவை என்பது விரைவில் உணரப்படும். இது சாத்தியமென்பது, 1965ல் குறைந்தது மூன்று கீழ்ப்பிரதேசத் தோட்டங்களில் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டது.

இந்நிலையத்தின் உபநிலையங்கள்பற்றி இவ்வாண்டு சில தீர்மா னங்கள் செய்யப்பட்டன. இந்நிலையங்களெல்லாம் மேலும் விஸ்தரிக்கப் படவிருக்கின்றன. ஹந்தானை 54 ஏக்கர்களாகப் பெருப்பிக்கப்படும். பசறைக்கு யுரித்தொகுதியிலிருந்து 122 ஏக்கர் தேயிலை நிலமும் 116 ஏக்கர் தேயிலையற்றநிலமும் சேர்க்கப்பட இருக்கின்றது. கொட்டாவ சுமார் 50 ஏக்கர்களால் பெருப்பிக்கப்படும். இம்மூன்று உபநிலையங் களிலும் சிறிய தொழிற்சாலைகள் தற்போது உண்டு. தளவாடங்கள் நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

சென்ற் கூம்ஸ், சென்ற் ஜோக்கிம் தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஆகியவைபற்றி சபையால் ஒரு பிரதான கொள்கை தீர்மானிக்கப்பட்டது. இத் தோட்டங்கள் முன்பு தனித்தனிக் கூறுகளாகக் கருதப்பட்டன. இனிமேல் இவை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பாகங்களெனக் கருதப் படும். இதனால், இந்நிலையத்தின் முக்கிய நோக்கமான தேயிலைத் தொ ழில்துறைக்காகிய ஆராய்ச்சி வேலைகள் நீடிக்கப்பட்டு, புதுப்புது ஆராய்ச் சியறிவுகளைப் பெறமுடியும்.

இவ்வருடாந்த அறிக்கையில் ஒரு புதுமுறை உட்புகுத்தப்பட்டுள். ஒரு பரிசோதனையை வருடாவருடம் பின்பற்ற இது உதவும். எல்லா வெளிநிலைப் பரிசோதனைகளுக்கும் தொழிற்சாலைப் பரிசோதனைகளுக்கும் எழுத்துகளும் இலக்கங்களும் கொடுக்கப்பட்டுள ; சம்பந்தப்பட்ட பிரிவுகளையும், பரிசோதனைகள் நடாத்தப்படும் சென்ற் கூம்ஸ் அல்லாத மற்றைய இடங்களையும் எழுத்துக்கள் குறிக்கின்றன (121ம் பக்கம் பார்). இலக்கங்கள் பொதுவாக, சம்பந்தப்பட்ட பிரிவுகளின் முன்னைய பரிசோதனைகள் அல்லது ஆராய்வுகளிலிருந்து ஆரம்பித்து, ஒன்றிலிருந்து வரிசையாகச் செல்கின்றன. ஒரு பரிசோதனை முடிந்ததும் இவ்விலக்கம் நீக்கப்பட்டு, திரும்ப உபயோகிக்கப்படமாட்டாது. எழுத்துக்களும் இலக்கங்களும் கொண்ட நாமவிலாசங்கள் எல்லா தே. ஆ. நி. பரிசோதனைகளுள்ள இடங்களிலும் தெளிவாக வைக்கப்பட்டுள. இவை அட்டவணையில் தரப்பட்டுள்ள பரிசோதனைகளுடன் இணைகின்றன (121ம் பக்கம்). பரிசோதனை இலக்கத்தைத் தொடர்ந்து இப்பரிசோதனையின் தலைப்பும், பின் இதன் புள்ளிவிபரவடிவ அமைப்பும், முடிவில் இப்பரிசோதனை ஆரம்பிக்கப்பட்ட வருடமும் உண்டு. ஒரு தோட்டம் அதன் பெயரினால் குறிப்பிடப்படாத போது, பரிசோதனை சென்ற் கூம்ஸில் அல்லது சென்ற் ஜோக்கிமில் இருப்பதாகக் கொள்க. இந் நிலையங்களில் எது குறிப்பிடப்படுகின்றதென்பதை பரிசோதனை விளக்கம் தெரிவிக்கும்.

புகுத்தப்பட்ட இன்னுமோர் புதுமுறைப்படி, பரிசோதனையைச் செய்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் அப்பிரிவின் தலைமைப் பதவியினரால் தரப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து காணப்படுகின்றன. இத் தலைமைப் பதவியினரே அப்பிரிவிலுள்ள எல்லாப் பரிசோதனைகளுக்கும் பொறுப்பானவர். இவர் தானாகச் செய்த ஆராய்ச்சிகள் அறிக்கையில் இருந்தாலன்றி இவரின் பெயர் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படமாட்டாது.

## பதவியினர்

சிரேட்ட பதவியினர் நிலை வருட முடிவில் திருப்திகரமாக இருந்தது.

கலாநிதி ஏ. டபிள்யு. ஆர். ஜோக்கிம் அவர்கள் ஜனவரி முதலாம் திகதி தனது அதிபர் பதவியிலிருந்து விலகியதிலிருந்து நான் அதிபராகக் கடமையாற்றுகின்றேன். கலாநிதி ஜோக்கிம் அவர்கள் முதலில் கீழ்ப்பிரதேச ஆலோசகராக 1956ல் நியமிக்கப்பட்டார். இரத்தினபுரிக்குக் கிட்ட இருக்கும் கீழ்ப்பிரதேச நிலையத்தை நிறுவியது இவரே. 1958 மார்ச் மாதத்திலிருந்து 1959 ஒக்டோபர்வரை, புது நிரந்தர அதிபரை நியமிப்பதற்கு முன், இவரே அதிபராகக் கடமையாற்றினர். கலாநிதி ஜோக்கிம் அவர்கள் தமது அதிபர் வேலையை என்னிடம் ஒப்படைத்தபின் தமது சேவையிலிருந்து விலகிக்கொண்டார்.

கலாநிதி எல். எச். பெர்னண்டோ உதவி அதிபராக நியமிக்கப்பட்டார். எனினும், கீழ்ப்பிரதேச நிலையம் இப்போதும் இவர் பொறுப்பிலுள. பிரதான பயிராக்கவறிஞராகக் கடமையாற்றிய கலா. எச். என். ஹசலோ ஒல்லாந்தில் வேலை செய்வதற்காக இந்நிலையத்தைவிட்டு அகன்றூர். பிரதான பயிராக்கவறிஞன் பதவி இப்போது அகற்றப்பட்டு, இப்பிரிவின் ஆராய்ச்சி வேலைகள் மற்றைய பிரிவுகளால் செய்யப்பட்டு வருகின்றன. பிரதான பரிபாலன உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு ஜி. எம். ஸ்பாக்ஸ், அவுஸ்திரேலியாவிலிருக்கும் இலங்கை தேயிலை பிரசாரச் சபையில் சேர்வதற்காக, இந்நிலையத்திலிருந்து விலகியதிலிருந்து திரு ஏ. சி. பெரரா இப்பதவியை ஏற்றுள்ளார். சென்ற் கூம்ஸ் தோட்டத்துரை திரு ஜே. ஜி. ஜி. தென்னக்கோன், முகவர்த்தாபனத் தோட்டத்தில் பதவியேற்பதற்கு இவ்விடத்தைவிட்டுப் பிரிந்தார். தோட்டத்துரைப் பதவி கமத்தொழிலறிஞன் என்னும் பதவியாக மாற்றப்பட்டு இப்பதவிக்கு திரு எல். ஏ. சீவரத்தினம் நியமிக்கப்பட்டார். உதவி பரிபாலன உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு பி. பத்மநாதன் ஜூன்

மாதத்தில் ராஜினமர்ச் செய்ததைத் தொடர்ந்து திரு எஸ். தியாகராசா இப்பதவிக்கு எடுக்கப்பட்டார். திரு சி. எச். விக்கிரமசிங்கா தேயிலைச் சுவைதிறனறிவோனுகை சிரேட்ட பதவியில் புதிதாக நியமிக்கப்பட்டார்.

மத்திய பதவியில் கீழ்வரும் நியமனங்கள் செய்யப்பட்டன : கலாநிதி ஏ. எஸ். எல். திரிமான (ஆராய்ச்சி உத்தியோகத்தர், உயிரினவிரசாயனப் பிரிவு), திரு டபிள்யு. ஜோசப் (ஆராய்ச்சி உதவியாளர், தொழினுட்பவியற் பிரிவு), திரு எஸ். நாகராசா (ஆராய்ச்சி உதவியாளர்), (தாவர உடற்ருெழிலியற் பிரிவு), திரு கே. ஜி. ஏ. தர்மவாதன (ஆராய்ச்சி உதவியாளர்), (தொழின்முறையியற் பிரிவு). திரு டபிள்யு. ஜோசப் (தொழின்முறையியல்), திரு ஏ. ஆர். செபாஸ்தியாம்பிள்ளை (தாவர விருத்தி) ஆகியோர் மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்றுள்ளனர். கலாநிதி டபிள்யு. தந்தநாராயன, (பூச்சியியல்) கலாநிதி. பி. சிவபாலன் (நெமற்றேடியல்) ஆகியோர் வெளிநாட்டுப் படிப்பு முடிந்து இலங்கை திரும்பியுள்ளனர்.

கலாநிதி எஸ். சி. வனிகறற்ன (கீழ்ப்பிரதேச நிலையம்), திரு. டபிள்யு. எம். பண்டாரநாயகா (கமத்தொழில் இரசாயனவியல்) திரு. கே. ஜி. ஏ. தர்மவாதன (தொழின்முறையியல்) ஆகியோர் தமது பதவியை ராஜினமா செய்துள்ளனர். இவ்வருடத்தில் ஏற்பட்ட பதவி மாற்றங்களைக் கொண்டபட்டியல் இணைக்கப்பட்டுள.

# ஆராய்ச்சி

## கமத்தொழில் இரசாயனவியல்

சென்ற் கூம்ஸ்சில், 3ம் நம்பர் வெளிநிலத்தில் இருக்கும் கலாநிதி எடினின் பழைய பரிசோதனை, நான்கு வருடங்களுக்கு முன் கவ்வாத்து வெட்டிய பின்னர் இப்போதும் மிகத்திறமாக இருக்கின்றது. 84 வயதுள்ள இந்தச் சீறிலைத் தேயிலையின் சராசரி விளைச்சல் ஒரு சக்கரமுறைக்கு ஒரு ஏக்கருக்கு ஒருவருடத்தில் 720 இறாத்தலாக இருந்தபோதும், 1965ல் இதன் சராசரி விளைச்சல் ஒரு ஏக்கருக்கு 900 இறாத்தலாகவும், சிறந்த பாத்திகளில் 1200—1300 இறாத்தலாகவும் இருந்தது. 60, 90 இறா. $K_2O$ வுக்கிடையே விளைச்சலில் குறிப்பிடத்தக்க வித்தியாசமிருந்தது அவதானிக்கத்தக்கது. ஆனால் $P_2O_5$ இன் வீதத்தை 30 இலிருந்து 60 இறாத்தலாகக் கூட்டுதலால் விளைச்சலில் எதுவித பயனுமில்லை. 32 வயதுள்ள பேரிலைத் தேயிலைக்கு சிங்குச் சல்பேற்று இடப்பட்டபோது முதலிரண்டு வருடங்களும் மொத்த விளைச்சல் கூடுதலாக இருந்தது. மூன்றாவது வருடம் இவ்விளைச்சல் நலந்தரும் சார்புடையதாக இருந்தபோதும் இது குறிப்பிடத்தக்களவு கூடுதலாக இருக்கவில்லை. ஒரு ஏக்கருக்கு 300 இறா. நைதரசன், அமோனியஞ் சல்பேற்றாக இடப்பட்டபோது விளைச்சல் கூடுதலாகவே இருந்தது. மூன்று வருடங்களுக்கு முன் கவ்வாத்து வெட்டிய பேரிலைத் தேயிலையில், எட்டு மாதக் கொழுந்தெடுப்பின்போது, சிங்கொட்சைட்டு சிங்குச்சல்பேற்றைவிடச் சிறந்தது எனக் காணப்பட்டது.

இளம் தேயிலை (ஶ T வரிசைகள்) பரிசோதனைகளிலிருந்து முக்கியத்துவம்வாய்ந்த பல கருத்துக்கள் வெளிவந்துள்ளன. சென்ற் கூம்ஸ்சில் பொசுபேற்று நன்மைதரவில்லை; ஆனால் அமோனியம் சல்பேற்று ½ அவுன்ஸ் வீதம் 7 மாதங்களுக்கு, ஒரு தாவரத்துக்கு 3½ அவுன்ஸ்வரை கொடுக்கப்பட்டபோது அதிக பயனேற்பட்டது. குழியின் அடியிலுள்ள மண்ணுடன் தொலமைற்றைச் சேர்ப்பது கெடுதியாகும். சென்ற் ஜோக்கிமில் சரளைக்கல் மண் இருக்குமிடங்களில், தாவரங்களைச் சுற்றியுள்ள மண்ணுடன் அமோனியம் சல்பேற்றை அல்லது க. அ. நை (CAN) ஐ சேர்க்கும்போது அதிக தாவரங்கள் இறந்தன. உக்கும் கௌதமாலாப் புல்லுள்ள இடங்களையண்டி இளம் தேயிலைச் செடிகளை நடுவதால் இதன் பின்னைய வளர்ச்சி எதுவிதத்திலும் பயனடைவதில்லை

ஒரு புதுத் திட்டமொன்றின்படி விரிவுப் பரிசோதனைகள் (Extension Experiments) ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வருட முடிவில் 7 பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன. தேயிலைக் கொழுந்து நிறைகள் இப்போது எடுக்கப்பட்டுவருகின்றன.

## தாவர இனப்பெருக்கவியல்

தே. ஆ. நி. (TRI) 2020 வரிசைகள்தான் மிகக் கூடுதலான விளைச்சல் தருபவை என்றும், நிழல் விளைச்சலைக் குறைக்கின்றது என்றும் முன்பு கண்ட பரிசோதனை முடிவுகளை 1961ல் ஆரம்பித்த முளைவகைப் பரிசோதனைகள் உறுதிப்படுத்தின. பசறை உபநிலையத்தில் சரளைக் கல் மண் பாத்திகளின் நிழற் பாத்திகளில் அதிக தாவரங்கள் பழுதடைந்தன. பின்னைய ஆண்டுகளில் ஆரம்பித்த 'சோதனைப்' (testing) பரிசோதனைகளிலிருந்துவரும் முடிவுகள் இன்னும் முற்றாக ஆராயப்படவில்லை. வெட்டுத்தண்டுகளின் வேராக்கத்தைப் பற்றிய ஒரு பரிசோதனையில் காட்டுமண் திறமானது எனவும் கௌதமாலா புல்லு மண் கீழ் மண்ணைப் போன்றது எனவும் காணப்பட்டது. காற்று மகரந்தச் சேர்க்கை, கையால் மகரந்தச் சேர்க்கை செய்யப்பட்ட முளை

வ்கை நாற்றுக்கள்பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து செய்யப்பட்டன. தே. ஆ. நி. 777 × தே. ஆ. நி. 2024 ஒரு சிறந்த கலப்பினப்பிறப் பாகும்.

## கீழ்ப்பிரதேச நிலையம்

செயற்கை உரம்பற்றிய பரிசோதனைகளிலிருந்து கடந்த சில ஆண்டு களில் கிடைத்த முடிவுகளை நிரூபிக்க 1965ல் பரிசோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. ஹந்தானையில் நடைபெறும் 10 வருடகால பரி சோதனையில், P உம் K உம் விளைச்சலைக் கூட்டுவதில்லையெனவும், 80 இரு. நைதரசன் இடப்படுவதால் விளைச்சல், இடப்படாதவற்றைவிட 7% கூடுதலாகவும், ஆனால் டியெல்றின் விசிறப்பட்ட பாத்திகளில் 14% கூடுதலாகவும் காணப்பட்டது. சிங்குச் சல்பேற்று தெளிப்பதால் எதுவித பயனுமில்லை. பாம்தோட்டத்தில் நடைபெறும் பரிசோதனை யில், நைதரசனுக்கும் அது வழங்கப்படும் முறைக்கும் குறிப்பிடத்தக்க கூடுதலான விளைச்சல் ஏற்பட்டது. பின்னுறுமாத காலத்தில் 225 இரு. நைதரசனுக்கு 20% கூடுதலான விளைச்சல் ஏற்பட்டது இதில் குறிப் பிடத்தக்கது. சென்ற் ஜோக்கிமில் முதிர்ந்த நாற்றுத் தேயிலையில் நடை பெறும் பரிசோதனைகளில் நைதரசனுக்கும் சிங்குக்கும் பின் ஆறுமாத காலங்களில் கூடுதலான விளைச்சல் ஏற்படவில்லை. இரண்டு வருட கால சக்கரத்தில், ஒரு வருடத்துக்கு 200 இரு. நைதரசனும் 10 இரு. சிங்குச் சல்பேற்றும் இடப்பட்டவற்றில் மட்டுமே கூடுதலான விளைச்சல் ஏற்பட் டது. மகாவெலத் தோட்டத்தில் சிங்குச் சல்பேற்று உபயோகித்து இதேபோன்ற முடிவுகள் காணப்பட்டன. சீர்ப்படுத்துதல், முளைவகைச் சோதனை, நிழல், நிலைக்குக் கொண்டுவருதல், கவ்வாத்து வெட்டல், இடைவெளியமைப்பு ஆகிய பரிசோதனைகள் இவ்வருடத்தில் சென்ற் ஜோக்கிமில் ஆரம்பிக்கப்பட்டன. நொய்தான, சரளைக்கல் மண்ணில், ஏக்கருக்கு 2 இரு. வீதம் போடப்படும் ' தோன்றும்போது கொல்லும் ' களைகொல்லிகள் அதிக மழைவீழ்ச்சியின்போது தேயிலைச் செடிகளின் வேர்வலயத்துக்கு கடத்தப்பட்டு இங்கு கேடான விளைவுகளை ஏற்படுத்து வதாக நமது செடிகொல்லிப் பரிசோதனைகள் தொடர்ந்து காண்பித்தன. ஒரு ஏக்கருக்கு, கிரமோக்சோனுடன் ஒரு இருத்தல் சிமசீன் அல்லது கார்மெக்ஸ் கலந்து உபயோகித்து அதிக பயன் காணப்பட்டது. இருபத் தொரு விரிவுப் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டது. இவற்றில், வருட பின்னுறு மாத காலங்களில் கொழுந்து நிறைகள் எடுக்கப்பட் டன.

## தாவர உடற்றொழியல்

அரும்புகளிலும் இளம் இலைகளிலும் இருக்கும் வளர்ச்சி நிரோ திகளைக் காண்பதன்மூலம் தேயிலைச் செடியின் வளர்ச்சி, உறக்க நிலை பற்றி ஆராயப்பட்டது. மண் சீர்ப்படுத்திப் பரிசோதனைகளில் கௌதமாலா, மான புல்லுகளுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படவில்லை. அதிக இலையுதிர்வால் விளைச்சல் பாதிக்கப்படுவதில்லை என பலவகைக் கவ்வாத்துவெட்டுப் பரிசோதனைகள் நிரூபித்தன. கவ் வாத்து வெட்டும் நேரத்தில் வேர்களில் இருக்கும் மொத்த காபோவைத ரேற்று அளவுக்கும் கவ்வாத்தின்பின் இச்செடி வளர்ச்சியுறும் விதத் துக்கும் எதுவித தொடர்புமில்லை எனக் காணப்பட்டது. கவ்வாத்து வெட்டு, செயற்கையுரமிடுதல் முறைகள் வெவ்வேறு காலங்களில் செய்யப்படுவதால் தாவரம் எவ்வளவில் நுனிதொடங்கிக் கருகுகின்றது என்பதை ஆராயப் பல விரிவுப்பரிசோதனைகள் வெவ்வேறு தோட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள. நான்கு பெரிய நிழல் — செயற்கை உரப் பரிசோதனைகளும் ஆரம்பிக்கப்பட்டுள.

## நெமற்றோடியியல்

கொழும்பில் அதிக வெப்பநிலை காரணமாக பல இழைப்புழுக்கள் கொல்லப்பட்டதால் இங்கு செய்யப்பட்ட இழைப்புழு எண்ணல்கள் பிழை

யென இப்பிரிவு காண்பித்தது. இனிமேல் எல்லா எண்ணல்களும் சென்ற் கூம்ஸ்சில் நடத்துவதற்காகிய வசதிகள் செய்யப்பட்டுவருகின்றன வலிமையுள்ள முளைவகைகள் பற்றிய வேலை தொடர்ந்து நடைபெறுகின்றது. இழைப்புழுக்களைத் தடுப்பதற்கு மெதயில் புரோமைட்டு உபயோகித்து பல பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் 100 சதுர அடிக்கு 2 இருத்தல் மெதயில் புரோமைட்டு தேவையெனக் காணப்பட்டது. சீர்படுத்து பரிசோதனையில், இழைப்புழுத் தொகையின் ' அரை வாழ்க்கை ' பற்றி ஒரு சிறந்த கருத்துக்காணப்பட்டது. இதில், சீர்படுத்துக் காலத்தின்போது ஒவ்வொரு 1.6 மாதங்களில் இழைப்புழுத் தொகை அரைவாசியாகக் குறைக்கப்படுவதாகக் காணப்பட்டது. முதிர்ந்த தேயிலையுள்ள இடங்களில் வசிக்கும் இழைப்புழுக்களைக் குறைப்பதற்கு மரிகோல்ட் செடிகள் உகந்ததல்ல எனக் காணப்பட்டது.

## தாவர நோயியல்

மெதயில் புரோமைட்டு உபயோகித்து மண்ணைப் புகையூட்டுதல் மூலம் போறியா என்னும் பங்கசுநோயைக் குறைக்கலாம் என இப்பிரிவு கண்டுபிடித்தது. மெதயில் புரோமைட்டு விலை குறைந்ததாக இருப்ப தோடல்லாமல், டி.டி. (D.D.) ஐ விட மிகச் சிறந்ததாகும். கொப்புள வெளிறலின் சிறுவித்தியாக்கத்தைப்பற்றிய சிறந்த ஆராய்வுகள் செய்யப்பட்டன. நிக்கல் குளோரைட்டுக்கு எதிராக செம்புக் கூட்டுக்களை உபயோகித்து பல வெளிநிலப் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காறைக்கோணல், கிளைக்கோணல், தண்டுக் கோணல் பற்றிய ஆராய்ச்சி வேலைகள் வெளி நிலத்திலும் பரிசோதனைச் சாலையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிழல் மரங்கள் வெட்டுவதைத் தொடர்ந்து ஏற்படும் வேர் நோய்கள்பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

## சிற்றுயிரியல்

சிறுதுளை துளைப்பியில் ( Shot-hole Borer ) நடாத்தப்பட்ட ஒன்பது பரிசோதனைகளின்படி, சரியான முறையில் உபயோகிக்கப்பட்டால் டியெல்றின் மிகச் சிறந்தது எனக் காணப்பட்டது. தேயிலை மிக அடர்த்தியாக இல்லாத இடங்களில் டியெல்றினுக்குப் பதிலாக அல்றினை நடுச்சக்கரகாலத்தில் விசிறுவது நல்லது. தோற்றிக்ச் புழு தோன்றுவதைத் தடுப்பதற்கு டியெல்றினைவிட அல்றின் உகந்தது. இது, மத்திய பிரதேசத்தில் மிக உபயோகமுள்ளது என நிருபிக்கப்பட்டுள்ளது. டியெல்றினை அல்றினுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு கீழ்ப்பிரதேசத்தில் ஐந்து பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வேறுபல பூச்சிகொல்லிகள் உபயோகித்து பல இடங்களில் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. ஆனால் இவையொன்றுவது டியெல்றினைப்போல் பயன்தருவனவல்ல. 1963—64ம் வருடத்தைவிட 1964—1965ம் வருடத்தில் தோற்றிக்ச் புழு குறைவாக இருந்தது. வல்றிம் தோட்டத்தில் நடாத்தப்படும் இரசாயனத் தடுப்புப் பரிசோதனையில் டி.டி.ரி. (D.D.T.) உம் பெபதேனும் (Perthane) ஆரம்பத்தில் விதிக தோற்றிக்ச் புழுக்களைக் கொன்றன ; ஆனால் அதிக மழைவீழ்ச்சி இருந்ததால் ஒரு திட்டமான முடிவை பெற முடியாமலிருந்தது. டியெல்றின் உபயோகித்ததன் விளைவாக பல இடங்களில் மயிர்கொட்டிகள் தோன்றின. கம்பு மயிர்கொட்டி, சுருக்கசைவு மயிர்கொட்டி ஆகியன அதிக பிரச்சனையாக இருந்தன. கம்பு மயிர்கொட்டியைத் தடுப்பதற்கு டி.டி.ரி. சிறந்தது. ஆனால் சுருக்கசைவு மயிர்கொட்டியைப் பொறுத்த வரையில் இவற்றின் இளம் குடம்பிப் பருவத்தில் மட்டுமே டி.டி.ரி. உபயோகிக்கச் சிறந்தது. கொப்புள வெளிறலைத் தடுப்பதற்கு செம்பு பங்கசுகொல்லிகளுக்குப் பதிலாக நிக்கல் பங்கசுகொல்லிகள் உபயோகிப்பதால் சிற்றுண்ணிகள் குறைவாகத் தோன்றுகின்றன எனவும் காணப்பட்டது. சிற்றுண்ணிகளையும் தோற்றிக்ச் புழுக்களையும் ஒரே நேரத்தில் தடுப்பதற்கு டி.டி.ரி. — கெல்தேன் அல்லது டி.டி.ரி. — தெடியோன் கலவைகள் உகந்தவை.

ஹந்தானே உபநிலையத்தில் நடாத்தப்படும் சூழற்கால ஆராய்ச்சிகள் இவ்வருடம் முழுவதும் தொடர்ந்து செய்யப்பட்டது. இதில் சிறந்த முடிவுகள் கிடைத்தன.

## உயிரினவிரசாயனம்

தேயிலைச் செடியின் உயிரினவிரசாயனக் கூறுகளின், முக்கியமாக காபோவைதரேற்று, ஒளித்தொகுப்புப் பொருட்கள், பிளேவனேல்களின் உயிரியற்றெகுப்பு, நைதரசன் அனுசேபம் ஆகிய அடிப்படை ஆராய்ச்சிகள் தொடர்ந்து செய்யப்பட்டன. இவ்வாராய்ச்சியிலிருந்து பின்வரும் உண்மைகள் வெளியாயின :

1. கொழுந்தினுல் ஒளித்தொகுப்புச் செய்யப்படும் காபன் கொழுந்திலேயே தங்குகின்றது ; விருத்தியாகும் அங்குரங்களேயண்டி இருக்கும் இலைகளால் ஒளித்தொகுப்புச் செய்யப்படும் காபன் இவ்வங்குரங்களுள் அசைகின்றது ; கொழுந்திலிருந்து 3 கணுக்களுக்கப்பால் இருக்கும் இலைகளால் ஒளித்தொகுப்புச் செய்யப்படும் காபன் வேர்களை நோக்கிக் கீழே அசைகின்றதேயன்றி ஒருபோதும் முதிர்ந்த இலைகளுக்குட் செல்வதில்லை.

2. முதிர்வுருத இலைகளிலுள்ள நொதியத்தினுலேயே பிளேவனேல்களின் உற்பத்தி தூண்டப்படுகின்றது.

3. கற்றெகோல் ஒட்சிடேஸ்பற்றி தொடர்ந்து செய்யப்பட்ட ஆராய்ச்சிப்படி, சதைவேர்களில் இந்நொதியம் அதிகளவில் இருப்பதாகக் காணப்பட்டது.

4. அமினே அமிலங்கள் உலர்த்தலின் போது கூடுகின்றன. நொதிப்பின்போதும் நெருப்பிடும் போதும் குறைகின்றன. கூடிய தரமுள்ள கொழுந்தில் அமினே அமில அளவு குறைவாக இருக்கின்றது. உலர்த்தலின்போது கபேன்கள் அமினே அமிலங்களிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

## உயிரினவிரசாயனம் (தேயிலை உற்பத்தி)

வெவ்வேறு முறைகளினுல் உற்பத்தி செய்த தேயிலையிலுள்ள கூறுகள்பற்றி அதிகளவு அளவறிதற்கு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. சி.ரி.சி. (CTC), லெக் (Legge) வெட்டு முறைகளினுல் செய்யப்படும் பதனிடுகையில் அதிக செறிவுள்ள மாற்றமுரு பல்பீனேல்களேயும் குளோரபில்களேயும் கொண்ட தேயிலைகள் தோன்றும் சார்புடையவை — குளோரபில்களே இத் தேயிலைகளின் கபிலநிறத் தோற்றத்துக்குக் காரணமானவை. கபிலநிறத் தோற்றமுடைய தேயிலைகள் வர்த்தகத்தில் அதிகமாய் ஏற்கப்படுவதில்லையாதலால், ஐதரசன் பேரொட்சைட்டு உபயோகித்து இந்நிறத்தைப் போக்குவதற்கு பல முயற்சிகள் செய்யப்பட்டன. அரைப்பதற்கு முன் இத்தீங்கற்ற இரசாயனப் பொருளேச் சேர்ப்பதால் உலர்ந்த தேயிலையின் கருமைநிறம் அதிகளவில் கூடி, மாற்றமுரு குளோரபில் தொகை குறைகின்றது. இக்கண்டுபிடிப்பின் உதவியால், முடிவில் கருமைநிறமுடைய விலையுயர்ந்த சி.ரி.சி. தேயிலையை கீழ்ப்பிரதேச இலையிலிருந்து தயாரிக்கக்கூடியதாக இருக்கலாம். தேயிலைப் பிரித்தெடுப்புகளில் ஆறு புது பல்பீனேல்கள் காணப்பட்டன. இவற்றில் மூன்று மெய்தனிக்களெனக் கண்டுபிடிக்கப்பட்டன. பல்வேறு செயற்கை உரங்கள் இடப்பட்ட தனி முளேவகைகளிலிருந்தும், நாற்றுத் தேயிலைப் பாத்திகளிலிருந்தும் தயாரித்து தேயிலைகளின் இரசாயனக் கூறுகளின் பருவகால மாற்றங்கள் பற்றி வருடம் முழுவதும் ஒழுங்காக ஆராயப்பட்டது. தேயிலை உற்பத்தியின்போது, முக்கியமாக கரற்றின்போலிகள், கீற்றே சேர்வைகள், குளோரபில்கள் ஆகியவற்றின் அளவிலும் தரத்திலும் ஏற்படும் மாற்றங்கள் பற்றி விவரமான ஆராய்ச்சிகள் செய்

யப்பட்டன. சிற்றுண்ணி எளிதில் தாக்கும் முளைவகைகளில் அதிகளவு இரோடோசாந்தின் இருப்பதாகக் காணப்பட்டது. சில தெரோல்கள் தேபீனோயிட்கள், விற்றமின் E ஆகியன கருமைநிறத் தேயிலையில் கண்டு பிடிக்கப்பட்ட மற்றைய சேர்வைகளாகும். முடிவில், தேயிலையின் வாசனைபற்றி இவ்வருடம் செய்யப்பட்ட அதிக ஆராய்ச்சிகளின்படி, வாசனைத் தேயிலைகளில், சாதாரண தேயிலைகளைவிடக் குறைவான கொதி நீராவிமுறைவடிக்கக்கூடிய கூட்டுகள் இருப்பதாகக் காணப்பட்டது. அமினோ அமில இலூசின் என்னும் இப்பொருள் வாசனை தரும் சில பொருட்களின் முன்னோடி எனவும், இதை உற்பத்தி செய்வதற்கு காபனீரொட்சைட்டு தேவையெனவும் காணப்பட்டது.

## தொழின்முறையியல்

தே. ஆ. நி. தேயிலை சுவைதிறனறிவோன் சேர்ந்த நாட் தொடக்கம் இவரின் சேவை அதிகளவில் உபயோகிக்கப்பட்டது. 934 தேயிலை மாதிரிகள் பற்றி இவர் அளித்த அறிக்கையின்படி புது முளைவகைகளை தரத்தின்படி வகுக்க முடிந்தது. இவற்றில், தில்லி கூல்றித் தோட்டத்திலிருந்து பெற்ற ரி.சி. 9 (TC 9) மட்டுமே A 1 தரத்தில் வைக்கப்பட்டது; ஆனால் 6 முளைவகைகள் A 2 தரத்தைப் பெற்றன. செம்பு அல்லது நிக்கல் தெளிக்கப்பட்ட இலையில் நடாத்தப்பட்ட உற்பத்திப் பரிசோதனைகளில், செம்பு தெளிக்கப்பட்ட தேயிலைகள் மங்கலான கஷாயம் உடையனவாய் இருக்கலாமெனக் காணப்பட்டது. சாக்கு அல்லது தொட்டி முறைகள் உபயோகித்து உலர்த்தும் முறை ஒப்பிடப்பட்ட போது இவற்றால் தேயிலையின் விலைமதிப்பில் குறிப்பிடத்தக்க வித்தியாசங்களிருப்பதில்லை எனக் காணப்பட்டது. ஆனால் தொட்டியை இயக்குவதற்கு எடுக்கும் எரிபொருட் செலவு சாக்குச் செலவின் அரைவாசியாகும். சீறிலை இலையை ரோரோவேன் செய்து தயாரித்த தேயிலையை பழைமைத் தேயிலையுடன் ஒப்பிட்டுப்பார்த்த ஒரு பரிசோதனையில், தேனீரிலோ அல்லது விலைமதிப்பிலோ எதுவித நன்மையிருப்பதாகக் காணப்படவில்லை. சென்ற் கூம்ஸ்சில், 'பருவமல்லாத காலத்தில்' நொதிப்பு நேரத்தை அதிகளவில் வேறுபடுத்தலாம் எனக் காணப்பட்டது. 2½ தொடக்கம் 5 மணித்தியாலங்கள்வரை வெவ்வேறு நொதிப்பு நேரங்கள் உபயோகிப்பதால் விலைமதிப்புகள் பாதிக்கப்படுவதில்லை. வெவ்வேறு வகை மேற்பரப்பை உபயோகித்து நொதிப்புச் செய்யப்பட்ட ஒரு பரிசோதனையில், தேயிலைத் தரத்தில் எதுவித மாற்றமும் காணப்படவில்லை தேயிலைப் பெட்டிகளாக உபயோகிப்பதற்கு சோதனையிடப்பட்ட உள்ளூர் மரங்களில், 15 இனங்களில் 4 மட்டுமே முற்றிலும் கறையற்றவையெனக் காணப்பட்டது. இறப்பர் மரங்களிலிருந்து செய்யப்பட்ட பெட்டிகள் இவற்றின் உட்புறத்தில் அலுமினியத் தகடு இடப்பட்டிருப்பின், தேயிலைப் பெட்டிகளாக உபயோகிக்க உகந்தவையெனக் காணப்பட்டது.

## புள்ளிவிவரவியல்

மற்றைய பிரிவுகளால் நடாத்தப்படும் பல்வேறுவகைப் பரிசோதனைகளை திட்டம் செய்வதிலும், ஆராய்வதிலும் இப்பிரிவு உதவுகின்றது. பூச்சித்தொகை ஆராய்ச்சிகள் முதற்கொண்டு தொழிற்சாலை இயந்திரப் பொறிப் பரிசோதனைகள் வரையுள்ள எல்லா ஆராய்ச்சிகளுக்கும் புள்ளி விவர ஆராய்வு முறைகள் அத்தியாவசியமெனக் காணப்பட்டன.

## ஆலோசனை வேலை

இப்பிரிவின் எல்லாவகை வேலைகளும் இவ்வருடம் துரிதப்படுத்தப் பட்டுள்ளன. தேயிலை உற்பத்தியில் இலாபம் குறைந்து வருவதால், இதைத் தவிர்க்க, செயற்கை உரங்கள் உபயோகித்தும், தாவர பாதுகாவல் முறைகளைக் கையாண்டும் இலாபத்தைக் கூட்ட வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதிக இடங்களில் நடுகை திரும்பச் செய்யப்படுவதால், முளைவகைகளின் இனப்

பெருக்கமுறை, வளர்ப்புமுறை பற்றிய பல ஆலோசனைகள் செய்ய வேண்டி இருந்தது. சென்ற் கூம்ஸ், சென்ற் ஜோக்கிம், பசறை ஆகிய இடங்களிலிருக்கும் ஆலோசனை உத்தியோகத்தர்கள் இப்பிரிவின் அதிக வேலைகளைச் செய்கிருர்கள். புதிதாகத் தொடங்கப்பட்ட விரிவுப் பரிசோதனைகளுக்கும் இவர்களே பொறுப்பாகும்.

## சென்ற் கூம்ஸ் தோட்டமும் சென்ற் ஜோக்கிம் தோட்டமும்

இவ்விரு தோட்டங்களிலும் கூடுதலான விளைச்சல்கள் பெறப்பட்டன — சென்ற் கூம்ஸ் தோட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 1510 இருத்தலும், சென்ற் ஜோக்கிம் தோட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 1191 இருத்தலும். சென்ற் கூம்ஸ் தோட்டத்தில், மூன்று வெளிநிலப் பிரிவுகளைத் தவிர்த்தி மற்றைய எல்லாவற்றிலும் நிழல் முற்ருக அகற்றப்பட்டது. இரண்டு வெளிநிலப் பிரிவுகளில் ஆறு மாதங்களுக்கு க. அ. நை. இடப்பட்டது. சென்ற் ஜோக்கிமிலுள்ள தேயிலைத் தொழிற்சாலையில் தைமாதம் தொடக்கம் துரித வேலைகள் நடைபெறுகின்றன. எனினும் கீழ்ப்பிரதேசத்திலுள்ள திறம் தேயிலைக்கு நிகரான தேயிலை இன்னும் இதில் உற்பத்தி செய்யப்படவில்லை. சென்ற் கூம்ஸ்சில் தேயிலையின் தரம் ஓரளவு திருப்திகரமாக இருந்தது.

## நூல்நிலையமும் வெளியீடுகளும்

இவ்வருடம் மேலும் பன்னிரண்டு வெளியீடுகள் வெளிவந்தால் இப்பொழுது மொத்தம் 231 வெளியீடுகள் உண்டு. மேலும் 133 புஸ்தகங்கள் நூல்நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

கலாநிதி ஆர். எல். டி சில்வா அவர்கள் தே. ஆ. நி. வெளியீடுகளின் துணைப் பதிப்பாசிரியராக வைகாசி மாதம் 1ம் திகதியிலிருந்து கடமையாற்றுகிருர். இதற்குமுன் திரு. ஜே. ஏ. எச். ரொலஸ்ற் அவர்கள் இப்பதவியிலிருந்தார். கீழ்க் காணப்படும் வெளியீடுகள் இவ்வருடம் வெளியாயின.

தேயிலை காலாண்டுச் செய்தி இதழ் 34 (1963) அட்டவணை
தேயிலை காலாண்டுச் செய்தி இதழ் 35 (1964) அட்டவணை
தேயிலை காலாண்டுச் செய்தி இதழ் 36, பாகங்கள் 1, 2, 3, 4
தே. ஆ. நி. வருடாந்த அறிக்கை (1963) பாகம் 1
தே. ஆ. நி. வருடாந்த அறிக்கை (1964) பாகம் 2
கீகல், இ. எல். (1958). ‘ இலங்கையில் தேயிலை உற்பத்தி ,.
தே. ஆ. நி. தனிக்கட்டுரை நூல் நம். 4 (179 பக்). புதிய பதிப்பு.

இலவசப் பகிர்வுப் பட்டியலில் 96 பெயர்கள் சேர்க்கப்பட்டதால், இப்போது மொத்தம் 2766 பதிப்புகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இந்நிலையத்தின் வெளியீடுகளின் வருடாந்தக் கட்டணம் உள்நாட்டோருக்கு 24 ரூபாவாகவும், வெளிநாட்டோருக்கு £2–5–0d ஆகவும் இப்போது கூட்டப்பட்டுள. இவ்விலைகள் 1966ம் ஆண்டிலிருந்து நடைமுறையிலிருக்கும். விளம்பரக்கட்டணங்களும் 50% கூட்டப்பட்டுள.

## கட்டடங்கள்

கீழ்க்காணும் கட்டடங்கள் இவ்வருடம் முடிக்கப்பட்டன :

1. விஞ்ஞானப் பொருட் பண்டசாலைகள்
2. நிறப்பதிவியல் அறை
3. மூன்று கீழ்ப்பதவியினர் வீடுகள்
4. கீழ்ப்பதவியினர் விடுதி
5. கொட்டாவ உபநிலையத்தில் அமைக்கப்பட்ட சிறிய தொழிற்சாலை

கீழ்க்காணும் வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன :

1. நாலு கனிட்டபதவியினர் வீடுகள்
2. இஞ்சினியர்க்கலைப் பிரிவின் இரண்டடுக்குக் கட்டடம்
3. பசறை உபநிலையத்தின் மாவட்ட ஆலோசனை உத்தியோகத்தரின் மாளிகை பெருப்பிக்கப்படுவது
4. ஹந்தானை, பசறை உபநிலையங்களின் சிறிய தொழிற்சாலைகள்
5. கீழ்ப்பதவியினரின் சனசமூக நிலையம்
6. தொட்டியிருந்த கட்டடம் தொழின்முறையியற் பரிசோதனைச் சாலையாக மாற்றப்படுதல்

## பார்வையாளர்

இலங்கைத் தேயிலைத் தொழிற் தோட்டத் துரைமார்கள், அங்கத்தவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், இலங்கை விஞ்ஞானிகள், வெளிநாட்டு விஞ்ஞானிகள், இன்னும் புகழ்பெற்ற பெரியோர் ஆகியோர் இந்நிலையத்தைப் பார்வையிட்டனர். இந்நிலையத்தைப் பார்வையிட்டவர்கள் பின்வருமாறு : சேர் யோன் ஆபுத்நொற், தலைவர், தோட்ட முகவர்த்தாபனம். லிட், லண்டன் ; திரு ஆர். கே. போற்றர், தலைவர், தேயிலைச் சபை, கனடா ; திரு எஸ். டபிள்யு. மில்லர், முகாமை அதிபதி, சி.சி.சி, லண்டன் ; திரு எம். கல்லின்கற், யு.எஸ் தூதுக்குழு அலுவலகம், கொழும்பு ; தேயிலைப் பேச்சுவார்த்தைக்காக இலங்கை வந்த எப். ஏ. ஓ. தூதுக்குழு ; கலாநிதி ஏ. விற்றன், எப். ஏ. ஓ. ரோம், திரு. நப்பியர் போட், ஜோச், வயிற், சன்டசன் அன்கம், யு.கே; திரு. வி. சி. பல்லாட், இலங்கையிலிருக்கும் அவுஸ்திரேலிய உயர்தானிகர் ; திரு. எப். டபிள்யு. ஹர்பர், அதிபதி, ஹறிசன் அன் குறொஸ்பீல்ட் யு.கே ; திரு. டபிள்யு, எஸ். எஸ். மக்கே, ஜேம்ஸ் பின்லே லிட், கிளஸ்கோ ; திரு. டி. எம். பொறஸ்ற், இலங்கைத் தேயிலை மையம், யு.கே ; கலாநிதி எப். சங்கர், கேம்பிறிச், இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கத்தின் 21 ஆவது வருடாந்தக் கூட்டத்துக்கு வந்த பிரித்தானிய சங்கத் தூதுக்குழு ; திரு. இ. சி. புறாக்ச், சர்வதேச தேயிலைச் செயற்குழு, லண்டன் ; திரு. ஜி. பல்டிற், தாவரப் பாதுகாப்பு கழகம் ; திரு. ஜி. ஏ. சென்ரமேயர், தெரியப்பட இருக்கும் தலைவர் அமெரிக்க தாவர நோயியற் சமூகம் ; திரு. கே. எப். கவனு, பிசன்ஸ் வெளிநாடு கழ ; திரு. ஏ. எம். ஹொட்ச், எடின்பேர்க், ஸ்கொட்லாந்து ; கலாநிதி பி. கே. டேவிசன், சர்வதேச நிக்கல் லிட், யு. கே. திரு. பி. என். காந்தி, சர்வதேச நிக்கல் லிட், பம்பாய் ; திரு. சி. ஏ. யக்சன், யு.கே ; திரு. எல். முல்லின்ஸ், தேசிய இறப்பர் ஆராய்ச்சிச் சங்கம் ; திரு ஜே. எம்.ஓ. லாங், ஜேம்ஸ் பின்லே லிட், முன்னூர், தென் இந்தியா; கலாநிதி ஏ. றிஜென்பக், பயிராக்க இரசாயன ஆராய்ச்சி நிலையம், சன்டஸ், சுவிச்சலாந்து ; திரு எல். டபிள்யு. இ. இஸ்ராபுக், ஈஸ்ரன் புறொடியுஸ், லண்டன் ; திரு. பி. எப். தோமஸ், வெல்ஸ் தாவர விருத்தி நிலையம், அபெறிஸ்வித் ; திரு. ஜே. எம். இ. றேஸ், கிரீன்வேஸ் பிளீற், யி.கே. திரு. இ. செல்சர், கலாநிதி ஆர். மூர்ஸ், தோமஸ் ஜே. லிப்டன்கூட்ஸ் ; யு.எஸ்.ஏ ; திரு. சென் ரங், பீக்கிங் சர்வகலாசாலை.

## நன்றியுரை

எமது பரிசோதனைத் திட்டங்களைச் செவ்வனே செய்ய அயராது உதவிய தோட்டத்துரைமார்கள் சங்கம், முகவர்த்தாபனச் சபைகள், தோட்டத்துரைமார்கள் ஆகியோருக்கு நிலையத்தின் சார்பாக நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

# பதவி மாற்றங்கள் 1965
# நியமனங்கள்

சிரேட்ட பதவியினர்

கலாநிதி இ. எம். செனறி, அதிபர், 1964 மார்கழி 31ம் திகதியிலிருந்து
திரு. சி. எச். விக்கிரமசிங்கா, தேயிலை சுவைதிறனறிவோன், 1965 ஆனி 1ம் திகதியிலிருந்து
திரு. ஏ. சி. பெரரா, பதில் பிரதான பரிபாலன உத்தியோகத்தர், ஐப்பசி 1ம் திகதியிலிருந்து
கலாநிதி எல். எச். பெர்ஞண்டோ, உதவி அதிபர், ஆனி 1ம் திகதியிலிருந்து

மத்திய பதவியினர்

திரு. டபிள்யு. ஜோசப், இயந்திரத் தொழில் இஞ்சினியர்க் கலை ஆராய்ச்சி உதவியாளர், தை 1ம் திகதியிலிருந்து
கலாநிதி ஏ. எஸ். எல். திரிமான ஆராய்ச்சி உத்தியோகத்தர் (உயிரின விரசாயனப் பிரிவு), தை 15ம் திகதியிலிருந்து
திரு. எல். ஏ. சீவரத்தினம், கமத்தொழிலறிஞன், வைகாசி 5ம் திகதியிலிருந்து
திரு. எஸ். நாகராசா, ஆராய்ச்சி உதவியாளர் (தாவர உடற்றொழிலியற் பிரிவு), ஆனி 1ம் திகதியிலிருந்து
திரு. கே. டி. எச். தர்மவாதன, ஆராய்ச்சி உதவியாளர் (தொழின் முறையியற் பிரிவு), ஆடி 1ம் திகதியிலிருந்து
திரு. எஸ். தியாகராசா, உதவி பரிபாலன உத்தியோகத்தர், ஆவணி 31ம் திகதியிலிருந்து

கனிட்ட பதவியினர்

திரு. டபிள்யு. ஏ. சி. டி சில்வா, மின்சாரத் தொழிலாளர், மாசி 1ம் திகதியிலிருந்து
திரு. பி. ரி. றனசிங்கா, மின்சாரத் தொழிலாளர் (கீழ்ப் பிரதேச நிலையம்), மாசி 1ம் திகதியிலிருந்து
திரு. என். எம். ஜெயத்திலகா, கணக்கு எழுதுவினைஞர், மாசி 1ம் திகதியிலிருந்து
திரு. ரி. எப். சால்டின், நுண்தொழில் உதவியாளர் (தொழின் முறையியற் பிரிவு), பங்குனி 15ம் திகதியிலிருந்து
திரு. கே. சிவலிங்கம், நுண்தொழில் உதவியாளர் (கமத்தொழில் இரசாயனவியற் பிரிவு), பங்குனி 8ம் திகதியிலிருந்து
திரு. ஏ. சோமரட்ண, நுண்தொழில் உதவியாளர் (கமத்தொழில் இரசாயனவியற் பிரிவு), சித்திரை 1ம் திகதியிலிருந்து
திரு. வி. எச். பெரரா, நுண்தொழில் உதவியாளர் (உயிரினவிரசாயனப் பிரிவு), சித்திரை 1ம் திகதியிலிருந்து
திரு. டி. ஜானகிரும், நுண்தொழில் உதவியாளர் (தாவர இனப்பெருக்கவியற் பிரிவு), சித்திரை 1ம் திகதியிலிருந்து
திரு. ஏ. எஸ். பி. கோமஸ், நுண்தொழில் உதவியாளர் (தாவர இனப்பெருக்கவியற் பிரிவு), ஐப்பசி 1ம் திகதியிலிருந்து
திரு. எஸ். ஆர். ஏ. பெர்ஞண்டோ, நுண்தொழில் உதவியாளர் (தாவர நோயியற் பிரிவு), ஐப்பசி 1ம் திகதியிலிருந்து
திரு. ரி. ஏ. முனசிங்க, நுண்தொழில் உதவியாளர் (தொழின் முறையியற் பிரிவு), கார்த்திகை 1ம் திகதியிலிருந்து
திரு. ரி. மணிவாசகர், நுண்தொழில் உதவியாளர் (நெமற்றோடியற் பிரிவு), மார்கழி 1ம் திகதியிலிருந்து

## வெளிநாட்டுப் பயிற்சி

கலாநிதி டபிள்யு. தந்தநாராயன இங்கிலாந்தில் தனது மேற்படிப்புப் பயிற்சியை முடித்து புரட்டாதி 23ம் திகதி திரும்பியுள்ளார்

கலாநிதி பி. சிவபாலன் அமெரிக்காவில் தனது மேற்படிப்புப் பயிற்சியை முடித்து கார்த்திகை 19ம் திகதி திரும்பியுள்ளார்

திரு. டபிள்யு. ஜோசப், இயந்திரத் தொழில் இஞ்சினியர்க் கலை ஆராய்ச்சி உதவியாளர் (தொழின் முறையியற் பிரிவு) தனது மேற்படிப்புப் பயிற்சிக்காக, பிரித்தானிய கைத்தொழில் கூட்டரசு உபகாரச்சம்பளப் படிப்பில், சித்திரை 23ம் திகதி இங்கிலாந்து சென்றுள்ளார்

திரு. ஏ. ஆர். செபஸ்ரியாம்பிள்ளை, ஆராய்ச்சி உதவியாளர் (தாவர இனப்பெருக்கவியற் பிரிவு) தனது மேற்படிப்புப் பயிற்சிக்காக, கொழும்புத் திட்ட உபகாரச்சம்பளம் படிப்பில், ஆவணி 6ம் திகதி இங்கிலாந்து சென்றுள்ளார்.

## விடுமுறை

கலாநிதி ஜி. டபிள்யு. சன்டசன், உயிரினவிரசாயனவறிஞன், 1964 மார்கழி 17ம் திகதியிலிருந்து 1965 பங்குனி 8ம் திகதி வரை தனது விடுமுறையில் வெளிநாடு சென்றிருந்தார்

திரு. ஜே. ஏ. எச். ரொலஸ்ற், கமத்தொழில் இரசாயனவறிஞன், 1965 ஆனி 1ம் திகதியிலிருந்து புரட்டாதி 29ம் திகதி வரை தனது விடுமுறையில் வெளிநாடு சென்றிருந்தார்

கலாநிதி ஏ. கேர், தாவர நோயியற் ஆலோசகர் ஆனி 13ம் திகதியிலிருந்து புரட்டாதி 12ம் திகதி வரை தனது விடுமுறையில் வெளிநாடு சென்றிருந்தார்

திரு. ஜே. இ. கிரனம், சிற்றுயிரறிஞன், ஆனி 23ம் திகதியிலிருந்து புரட்டாதி 23ம் திகதி வரை தனது விடுமுறையில் வெளிநாடு சென்றிருந்தார்

திரு. சி. பி. பொஸ்டர் — பாஹம், பிரதான ஆலோசனை உத்தியோகத்தர், ஆடி 1ம் திகதியிலிருந்து ஐப்பசி 4ம் திகதி வரை தனது விடுமுறையில் வெளிநாடு சென்றிருந்தார்

## வெளிநாடு சென்றோர்

திரு. எஸ். பி. வைத்திலிங்கம், தே. ஆ. நி. கட்டுப்பாட்டுச் சபை அங்கத்தவர், கலாநிதி ஆர். எல். டி சில்வா, ஆராய்ச்சி உத்தியோகத்தர், தாவர நோயியற் பிரிவு, ஆகியோர் 1965 புரட்டாதி 6ம் திகதி, தென் இந்திய ஐக்கிய தோட்டத்துரைமார் சங்கத்தின் 12வது வருடாந்த விஞ்ஞானக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## ராஜினாமாக்கள்

திரு. டபிள்யு. எம். பண்டாரநாயக்கா, ஆராய்ச்சி உதவியாளர் (கமத்தொழில் இரசாயனவியற் பிரிவு), தை 20ம் திகதியிலிருந்து

திரு. ஏ. எல். ஜே. டி குறூஸ், நுண்தொழில் உதவியாளர் (தாவர இனப்பெருக்கவியற் பிரிவு), தை 19ம் திகதியிலிருந்து

திரு. எஸ். கே. கோவிந்தசாமி, நுண்தொழில் உதவியாளர் (கமத்தொழில் இரசாயனவியற் பிரிவு), தை 25ம் திகதியிலிருந்து.

திரு. எல். எஸ். வீரகொடி, நுண்தொழில் உதவியாளர் (தொழின் முறையியற் பிரிவு), தை 31ம் திகதியிலிருந்து

திரு. இ. ஓ. ஸ்ருவாட், நுண்தொழில் உதவியாளர் (கமத்தொழில் இரசாயனவியற் பிரிவு), மாசி 28ம் திகதியிலிருந்து

திரு. எஸ். எம். கந்தசாமி நுண்தொழில் உதவியாளர் (பயிராக்கவியற் பிரிவு), பங்குனி 31ம் திகதியிலிருந்து

திரு. எம். எச். டபிள்யு. அரியரத்ன, தாபன எழுதுவினைஞர், சித்திரை 15ம் திகதியிலிருந்து
திரு. ஜே. ஜீ. ஜீ. தென்னக்கோன், தோட்டத்துரை, சென்ற் கூம்ஸ், சித்திரை 30ம் திகதியிலிருந்து
கலாநிதி எஸ். சி. வணிகரத்ன, ஆராய்ச்சி உத்தியோகத்தர், கீழ்ப் பிரதேச நிலையம், வைகாசி 1ம் திகதியிலிருந்து
திரு. டி. எஸ். ஜெயசேகரா, நூல்நிலைய உதவியாளர், வைகாசி 31ம் திகதியிலிருந்து
கலாநிதி எச். என். அசலொ, பிரதான பயிராக்கவியலறிஞன், ஆடி 1ம் திகதியிலிருந்து
திரு. பி. பத்மநாதன், உதவி பரிபாலன உத்தியோகத்தர், ஆடி 13ம் திகதியிலிருந்து
திரு. என். பீரிஸ், சுருக்குத் தட்டச்சாளர், ஆடி 14ம் திகதியிலிருந்து
திரு. ஜே. பி. இ. நவரத்ன, பதிவு எழுதுவினைஞர், ஆவணி 31ம் திகதியிலிருந்து
திரு. கே. ஜீ. ஏ. தர்மவாதன, ஆராய்ச்சி உதவியாளர் (தொழின் முறையியற் பிரிவு), ஐப்பசி 1ம் திகதியிலிருந்து
திரு. ஜீ. எம். ஸ்பாக்ஸ், பிரதான பரிபாலன உத்தியோகத்தர் ஐப்பசி 12ம் திகதியிலிருந்து